முருகப்பெருமான் துணை

**மகான் மாணிக்கவாசகர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.05.2022, செவ்வாய்கிழமை

1. மக்களை மீட்கும் சக்தியாக
மரணத்தை விரட்டும் சக்தியாக
ஆக்கமுடன் ஆறுமுகப் பெருமான்
அளவிலா சக்தியாக வந்த குருவே
2. குருவரங்கனே பெருமை கூறி
குறைவிலா சுபகிருது விடைதிங்கள்
உறுதிபட மூவைபீர் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 17 ம் நாள், 31.05.2022 செவ்வாய்கிழமை)
உயர்வாக அருளாசி தன்னை
3. தன்னையே மாணிக்கவாசகர் யானும்
தரணியை காத்தருள உரைப்பேன்
மண்ணுலகில் தரும சிந்தை
மக்களிடை வளரவே மாற்றம்
4. மாற்றம் பாதுகாப்பு மிக்க
மகத்துவ நிலைதனை அடையும்
ஆற்றல்மிக்க வேலவன் வழிபாடு
அரங்கஞானி வகுத்த பூசையாக
5. ஆகவே உலகமெங்கம் பரவிட
அன்பெனும் மகா சக்தி
மிகையாகி மக்களிடை தயவு
மாதருமமாக வெளிப்பட்டு உலகில்
6. உலகில் பாதுகாப்புச் சிறப்பு
உயர்வான வளர்ச்சிகளும் கண்டு
கலகம் துன்பம் யுத்தமிலா
கண்ணியம் மிக்க பூமியாக
7. ஆகவே மாற்றம் காணும்
அமைதியும் மகிழ்வும் கூடும்
வகையான வளர்ச்சி பணிகளும்
வதையிலா வளரும் பெருகும்
8. பெருகவே மக்களிடை ஞானம்
பேராசான் தீட்சை வடிவாக
பெருகி வரமாகக் கூடி
பெருநிலை மெய் ஞானநிலை ஆகும்
9. ஆகவே ஜீவ தயவு எனும்
அற்புதத் தெளிவு கிட்டி
செகத்தினர் அனைத்துபேரும்
சித்திகள் பெற்றவர்களாகி

10. ஆகியே உலகை மாற்றும்
அரங்கன் வழி ஞானிகளாகி
அகிலமாற்றம் ஞான ஆட்சியாக
ஆறுமுகனார் தலைமை வருகின்ற

11. வருகின்ற காலம் ஆக்கி
வையகத்தை ஞானவான்களே
முருகப்பெருமான் ஆசிபட ஆள்வர்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

—சுபம்—